# முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி, MBA., LLM.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**

2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 25–ஆம் நாள், வியாழன்கிழமை

**I.A. No. 19 of 2025 in O.S. No. 81 of 2008**
**(CNR No. TNSA13-000015-2008)**

கணேசன் .. மனுதாரர் / வாதி

எதிராக

1. அழகப்பன்
2. ரத்தினம்
3. சங்கர் (எ) ஆரிமுத்து .. எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, இன்று இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபொழுது, மனுதாரர் / வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. V.R. ராஜிந்திர மகாஜன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. R. ஆறுமுகம் அவர்களும் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்து இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**.. 2 ...**

**<u>உத்தரவுரை</u>**

அசல் வழக்கை மறுதிறவு செய்து, வா.சா.ஆ.14, 15 ஆவணங்களை பொறுத்து பி.வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிவேண்டி மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. **<u>மனுதாரர் / வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தின் சுருக்கம் :</u>** மனுதாரர் / வாதி அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் முதல் சாட்சியான சங்கர் என்பவரின் விசாரணை கடந்த 04.11.2022–ம் தேதியோடு முடிக்கப்பட்டு வாதங்களுக்காக வாய்தா போடப்பட்டதாகவும், கடந்த 20.10.2023 அன்று மனுதாரர் / வாதியான வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து செல்லம்மாள் வகையறா, ஆரிமுத்துவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தை மனுதாரர் / வாதி தரப்பில் வா.சா.ஆ.14–ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 19.08.2025 அன்று வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து கடந்த 15.07.2002 அன்று 3–ம் பிரதிவாதிக்கு முருகேசன் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தை வா.சா.ஆ.15–ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி 2 ஆவணங்களையும் குறியீடு செய்வதற்கு முன்பே பி.வா.சா.1–ன் சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டதால் மேற்படி ஆவணங்களை பொறுத்து அவரிடம் குறுக்கு விசாரணை கேள்விகள் கேட்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டதாகவும், மேற்படி 2 பத்திரங்களான வா.சா.ஆ.14 மற்றும் வா.சா.ஆ.15 ஆகிய ஆவணங்கள் தற்பொழுதுதான் குறியீடு செய்யப்பட்டதால், மேற்படி 2 பத்திரங்களை பொறுத்து பி.வா.சா.1 சாட்சியத்திடம்

*.. 3 ...*

விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே, தாவாவை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மறுதிறவு செய்யவேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார்.

3. **<u>3–ம் எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 1, 2 எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:</u>** மனுவில் சொல்லியுள்ள சங்கதிகளில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ஒப்புக்கொண்ட சங்கதிகளை தவிர மற்றவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர். மேலும், பி.வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்ட 3–ம் பிரதிவாதியை தாவா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் குறித்தும், எழுவினாக்களுக்கு ஏற்றவாறும், வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு ஏற்றவாறும் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், வழக்கில் இறுதி தீர்ப்பு பிறப்பிக்காமல் இருக்க பல மனுக்களை கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக மனுதாரர் / வாதி தாக்கல் செய்து வருகிறார் என்றும், வழக்கின் தீர்ப்பை காலம் கடத்தும் நோக்கத்தில் மனுதாரர் / வாதி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வழக்கை மறுதிறவு செய்து பி.வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டுமென்று இம்மனுவை தாக்கல் செய்திருப்பது அவசியமற்றது என்றும், எனவே, மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,**

*மனுதாரர் / வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா?*

.. 4 ...

5. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. **<u>தீர்வு :</u>**

1) மனுதாரர் / வாதி தன்னுடைய மனுவில், அசல் வழக்கை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளின் முதல் சாட்சியான சங்கர் என்பவரின் விசாரணை கடந்த 04.11.2022–ம் தேதியோடு முடிக்கப்பட்டு வாதங்களுக்காக வாய்தா போடப்பட்டதாகவும், கடந்த 20.10.2023 அன்று மனுதாரர் / வாதியான வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து செல்லம்மாள் வகையறா, ஆரிமுத்துவிற்கு எழுதிக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட பாகபாத்திய விடுதலைப்பத்திரத்தை மனுதாரர் / வாதி தரப்பில் வா.சா.ஆ.14–ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 19.08.2025 அன்று வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து கடந்த 15.07.2002 அன்று 3–ம் பிரதிவாதிக்கு முருகேசன் வகையறா எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரத்தை வா.சா.ஆ.15–ஆக குறியீடு செய்யப்பட்டதாகவும், மேற்படி 2 பத்திரங்களை பொறுத்து பி.வா.சா.1 சாட்சியத்திடம் விசாரணை செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே தாவாவை எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் மறுதிரவு செய்ய வேண்டியது அவசியம் என்றும் கூறியுள்ளார். மாறாக எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்களுடைய எதிருரையில், பி.வா.சா.1–ஆக விசாரிக்கப்பட்ட 3–ம் பிரதிவாதியை தாவா சொத்துக்கள் சம்மந்தப்பட்ட ஆவணங்கள் குறித்தும், எழுவினாக்களுக்கு ஏற்றவாறும், வழக்கில் கோரியுள்ள பரிகாரங்களுக்கு ஏற்றவாறும் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுவிட்டது என்றும், வழக்கில் இறுதி தீர்ப்பு பிறப்பிக்காமல் இருக்க பல மனுக்களை கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக மனுதாரர் / வாதி தாக்கல் செய்து வருகிறார் என்றும், வழக்கின் தீர்ப்பை காலம் கடத்தும் நோக்கத்தில் மனுதாரர் / வாதி இம்மனுவை

.. 5 ...

தாக்கல் செய்துள்ளதால் இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

2) அசல் வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், கடந்த 20.10.2023 மற்றும் 19.08.2025 ஆகிய தேதிகளில் வா.சா.1–ஐ மீண்டும் அழைத்து அவர் மூலம் வா.சா.ஆ.14, 15 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஆவணங்கள் குறித்து பி.வா.சா.1 சாட்சியத்திடம் குறுக்கு விசாரணை செய்யவேண்டியது அவசியம் என்று மனுதாரர் / வாதி தரப்பில் கூறியுள்ள நிலையில் நீதியின் நலன் கருதி இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என்பதால் இம்மனுவை இந்நீதிமன்றம் அனுமதித்து உத்தரவிடுகிறது. வழக்கு கடந்த 2008 முதல் நிலுவையில் இருந்து வருவதாலும், மேலும் வழக்கானது இருதரப்பு வாதங்களுக்காக நிலுவையில் இருந்து வருவதாலும் இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

3) மனுதாரர் / வாதி, எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு செலவுத்தொகையாக ரூ.500/–ஐ 08.10.2025–ற்குள் செலுத்த வேண்டும். தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும்.

7. இறுதியாக, மனுதாரர் / வாதி தாக்கல் செய்துள்ள இம்மனுவை இந்நீதிமன்றம் செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடுகிறது.

இவ்வுத்தரவுரையானது என்னால் சுருக்கெழுத்துத்–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு

.. 6 ...

செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள், 25–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.25 18:21:49 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

| | |
|---|---|
| மனுதாரர் / வாதி தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் : | இல்லை |
| மனுதாரர் / வாதி தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : | இல்லை |
| நீதிமன்ற சாட்சிகள் : | இல்லை |
| நீதிமன்ற சான்றாவணங்கள் : | இல்லை |

D JANSIRANI Digitally signed by D JANSIRANI Date: 2025.09.25 18:22:00 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**ஆத்தூர்.**

**மு.மா.உ.நீ., (மு.கூ.பொ) ஆத்தூர்.**

**இ.ம.வ. எண் 19/2025**

**---------------**

**அ.வ. எண் 81/2008**

அசல் / வரைவு உத்தரவுரை

நாள் : 25.09.2025